சமூக நலம் மற்றும் சத்துணவுத்
திட்டத்துறை.
தலைமைச் செயலகம்,
சென்னை–9.

கடித (நிலை) எண்.111/சந7(1)/2011 நாள்.14.5.2012.

அனுப்புநர்
திரு. அசோக் டோங்ரே, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
முதன்மைச் செயலர் / சிறப்பு ஆணையர்,
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்,
தரமணி, சென்னை – 113.

சமூகநல இயக்குநர்
சென்னை–2.

அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்

அம்மையீர் / அய்யா,

பொருள் சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை – ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் - மாற்றுத் திறனாளிகளுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் ஊர்திப்படி ரூ.300/- லிருந்து ரூ.1000/-ஆக 01.10.2010 முதல் உயர்த்தி வழங்க ஆணையிட்டது – புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் / ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில் பணியாற்றி வரும் மாற்றுத்திறனாளி பணியாளர்களுக்கும் நடைமுறைப்படுத்துதல் – தெளிவுரை வழங்குதல்

பார்வை 1 அரசு கடித (நிலை) எண் 86/ச.உ.தி-2/2008 நாள் 16.7.2008

2 அரசு ஆணை (நிலை) எண் 391, நிதி (படிகள்)த்துறை நாள் 07.10.2010

3 முதன்மைச் செயலர்/சிறப்பு ஆணையர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம், ந.க.எண்.2155/இ3-2/2011 நாள் 02.03.2011

+++++

அரசு கடித (நிலை) எண் 86/சஉதி-2/2008 நாள் 16.7.2008ன்படி புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்/ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டங்களில்

பணிபுரியும் உடல் ஊனமுற்ற பணியாளர்களுக்கும் அரசு கடித எண். 150262/PC-1/89-1, நாள் 31.1.1990ன்படி உடல் ஊனமுற்றோருக்கான போக்குவரத்துப்படி (Conveyance Allowance) பொருந்தும் என்பதால், அரசு ஆணை (நிலை) எண்.667/நிதி (ஊ.பி)துறை, நாள் 27.06.1989ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளையும் பின்பற்ற வேண்டும் என்ற நியதிக்குட்பட்டு வழங்கலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

2. அரசு ஆணை (நிலை) 391, நிதி (படிகள்) துறை, நாள் 07.10.2010ன்படி அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத அலுவலர்கள், அரசு நிதியுதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்களில் மாற்றுத் திறனாளிகளுக்கு மாதந்தோறும் வழங்கப்பட்டு வரும் ஊர்திப்படியை ரூ.300/-லிருந்து ரூ.1000/-ஆக உயர்த்தி அரசு ஆணையிடப்பட்டுள்ளது.

3. அதனடிப்படையில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் செயல்படும் அங்கன்வாடி மையங்களில் பணிபுரியும் மாற்றுத் திறனாளி அங்கன்வாடி ஊழியர்களுக்கும் இவ்வரசாணையின்படி மாற்றுத் திறனாளிகளுக்கான ஊர்திப்படியை ரூ.1000/- ஆக மாதந்தோறும் வழங்குவதற்கு ஆணையினை வழங்குமாறு முதன்மைச் செயலர் / சிறப்பு ஆணையர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் அவர்கள் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. அரசாணை (நிலை) எண்.391 நிதித்துறை நாள் 07.10.2010ல் மாற்றுத் திறனாளிகளுக்கான ஊர்திப்படி ரூ.300/– லிருந்து ரூ.1000/– ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. எனவே, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்/ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில் பணியாற்றி வரும் (சத்துணவு அமைப்பாளர், சமையலர், உதவியாளர், அங்கன்வாடி பணியாளர், குறு மைய பணியாளர் மற்றும் அங்கன்வாடி உதவியாளர்) மாற்றுத் திறனாளி பணியாளர்களுக்கும் மேற்காணும் ஆணை பொருந்தும் என தெளிவுரை வழங்கப்படுகிறது. மேலும், அரசு ஆணை (நிலை) எண்.667, நிதி (ஊ.பி.) துறை நாள் 27.6.1989ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளையும் பின்பற்ற வேண்டும் என்ற நியதிக்குட்பட்டு ஊர்திப்படி வழங்கலாமென அறிவுறுத்தப்படுகிறது.

5. மேற்காணும் தெளிவுரை நிதித் துறையின் அ.சா.கு.எண்.17894/(படிகள்)/2012, நாள் 10.4.2012 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

அரசு முதன்மைச் செயலாளருக்காக

14/5/2012

நகல்
மாற்றுத் திறனாளிகள் நலத்துறை,
சென்னை–9.
இ.கோ./உதிரி.